# ஆளுநர் மாளிகை, அரசு அலுவலகங்களில் சுதந்திர தின விழா கொண்டாட்டம்

சென்னை, ஆக. 15- தமிழக ஆளுநர் மாளிகை மற்றும் அரசு அலுவலகங்களில் சுதந்திர தின கொடியேற்று விழா மற்றும் நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றது.

தமிழக ஆளுநர் மாளிகையில் நடந்த சுதந்திர தின நிகழ்ச்சியில் கவர்னர் பன்வாரிலால் புரோகித் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் கூடுதல் தலைமை செயலாளர் ஆர்.ராஜகோபால் மற்றும் ராஜ்பவன் ஊழியர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சியில் கமிஷனர் பிரகாஷ் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். பள்ளி மாணவிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். பின்னர் நடந்த நிகழ்ச்சியில் மாநகராட்சியில் சிறப்பாக பணியாற்றிய 64 பேருக்கு பாராட்டு பத்திரங்களை வழங்கினார். மேலும், கடந்த ஆண்டுகளில் அதிக மாணவர்களை பள்ளியில் சேர்த்த 71 சென்னை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு பத்திரங்களை வழங்கினார். அதேபோல், 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற 25 சென்னை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும் மாநகராட்சி கமிஷனர் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

சென்னை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் சீத்தாலட்சுமி தேசிய கொடியை ஏற்றிவைத்தார். பின்னர் சுதந்திர போராட்ட தியாகிகளை கவுரவித்தார். இதையடுத்து நடந்த நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

காமராஜர் துறைமுகத்தில் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் பி.ரவீந்திரன் தேசிய கொடியை ஏற்றிவைத்தார். இதையடுத்து, மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு நடந்தது.

சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தில் நடந்த சுதந்திர தின நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வடிகால் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிர்வாக இயக்குநர் ஹரிஹரன் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். இதையடுத்து, கடந்த 25 ஆண்டுகளாக சிறந்த முறையில் களப்பணியாற்றிய வாரிய ஊழியர் ரவிக்கு பாராட்டு பத்திரம் மற்றும் ரொக்கப் பரிசு வழங்கினார். நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் செயல் இயக்குநர் பிரபு சங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சென்னை மெட்ரோ ரயில் சார்பில் நடந்த சுதந்திர தின நிகழ்ச்சியில் மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பங்கஜ் குமார் பன்சால் தேசிய கொடியை ஏற்றிவைத்தார். இதையடுத்து நடந்த நிகழ்ச்சியில் மெட்ரோ ரயில் ஊழியர்களுக்கிடையே நடந்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 64 பேருக்கு நிர்வாக இயக்குநர் பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மெட்ரோ ரயில் இயக்குநர்கள் சுஜாதா ஜெயராஜ், நரசிம் பிரசாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில தேர்தல் ஆணையர் பழனிசாமி தேசிய கொடியை ஏற்றி வைத்தார். அரும்பாக்கம் அரசு சித்த மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் டீன் ஜெயந்தி கொடி ஏற்றினார்.